www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி தமிழ்

# 8

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உரை நூல்.

www.Padasalai.Net

லொயோலா பப்ளிகேஷன்
விவேக் இல்லம்
19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 7.
போன் : 0462 - 2553186, 2552405
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 245/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

**ஆசிரியர்கள்:**

திரு. S. **ஜேசுராஜ்** M.A., M.Ed.
தமிழாசிரியர் (பணிநிறைவு)
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை

திருமதி. S. **வர்கீஸ் மேரி** M.A., M.Ed
தமிழாசிரியை (பணிநிறைவு)
தூய இஞ்ஞாசியார் மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை

மேற்பார்வை:
**மு. கெஜமுத்துமாரி,** M.A., M.Phil., B.Ed.,
விக்கிரமசிங்கபுரம், நெல்லை.

Loyola Publications



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## தமிழ்



| வ. எண் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதிகள் | 5 |
| 1 | **மொழி** தமிழ் இன்பம் | தமிழ்மொழி வாழ்த்து * | 8 |
| | | தமிழ்மொழி மரபு | 11 |
| | | தமிழ் வரிவடிவ வளர்ச்சி | 14 |
| | | சொற்பூங்கா | 19 |
| | | எழுத்துகளின் பிறப்பு | 20 |
| 2 | **இயற்கை** ஈடில்லா இயற்கை | ஓடை* | 28 |
| | | கோணக்காத்துப் பாட்டு | 30 |
| | | நிலம் பொது | 34 |
| | | வெட்டுக்கிளியும் சருகுமானும் | 38 |
| | | வினைமுற்று | 38 |
| | | திருக்குறள்* | 44 |
| 3 | **அறிவியல், தொழில்நுட்பம்** உடலை ஓம்புமின் | நோயும் மருந்தும் * | 48 |
| | | வருமுன் காப்போம் * | 51 |
| | | தமிழர் மருத்துவம் | 55 |
| | | தலைக்குள் ஓர் உலகம் | 60 |
| | | எச்சம் | 62 |
| 4 | **கல்வி** கல்வி கரையில | கல்வி அழகே அழகு* | 68 |
| | | புத்தியைத் தீட்டு | 71 |
| | | பல்துறைக் கல்வி | 74 |
| | | ஆன்ற குடிப்பிறத்தல் | 78 |
| | | வேற்றுமை | 80 |
| 5 | **கலை, அழகியல், பண்பாடு** குழலினிது யாழினிது | திருக்கேதாரம் | 87 |
| | | பாடறிந்து ஒழுகுதல்* | 91 |
| | | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 94 |
| | | தமிழர் இசைக்கருவிகள் | 98 |
| | | தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் | 100 |
| | | திருக்குறள்* | 105 |





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 6 | **நாகரிகம், தொழில், வணிகம்** வையம்புகழ் வணிகம் | வளம் பெருகுக | 108 |
| | | மழைச்சோறு | 110 |
| | | கொங்குநாட்டு வணிகம் | 112 |
| | | காலம் உடன் வரும் | 115 |
| | | புணர்ச்சி | 116 |
| 7 | **நாடு, சமூகம்** பாருக்குள்ளே நல்ல நாடு | படை வேழம்* | 120 |
| | | விடுதலைத் திருநாள் | 123 |
| | | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் | 126 |
| | | அறிவுசால் ஔவையார் | 131 |
| | | வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் | 132 |
| 8 | **அறம், தத்துவம், சிந்தனை** அறத்தால் வருவதே இன்பம் | ஒன்றே குலம்* | 141 |
| | | மெய்ஞ்ஞான ஒளி | 143 |
| | | அயோத்திதாசர் சிந்தனைகள் | 146 |
| | | மனித யந்திரம் | 150 |
| | | யாப்பு இலக்கணம் | 151 |
| | | திருக்குறள்* | 158 |
| 9 | **மனிதம், ஆளுமை** குன்றென நிமிர்ந்துநில் | உயிர்க்குணங்கள் | 161 |
| | | இளைய தோழனுக்கு | 164 |
| | | சட்டமேதை அம்பேத்கர் | 167 |
| | | பால் மனம் | 171 |
| | | அணி இலக்கணம் | 172 |
| | | கட்டுரைகள், கடிதங்கள் | 176 |
| | | மாதிரி வினாத்தாள் | 183 |


www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# மனப்பாடப்பகுதிகள்

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே.

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே.

– பாரதியார்

## ஓடை

ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
(ஓடை ஆட...)

பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி! (ஓடை ஆட...)

நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி
(ஓடை ஆட...)

நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்
(ஓடை ஆட...)

– வாணிதாசன்

## திருக்குறள்

**நடுவு நிலைமை**

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

**கூடா ஒழுக்கம்**

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

**கல்லாமை**

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

**குற்றங் கடிதல்**

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

– திருவள்ளுவர்

## நோயும் மருந்தும்

போர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே.

## வருமுன் காப்போம்

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!.

– கவிமணி தேசிக விநாயகனார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கல்வி அழகே அழகு

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்

- குமரகுருபரர்

## பாடறிந்து ஒழுகுதல்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

- நல்லந்துவனார்

## திருக்குறள்



### தெரிந்து வினையாடல்

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

### சொல்வன்மை

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்

சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து

- திருவள்ளுவர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## படை வேழம்

### கலிங்கர் தோற்றுச் சிதைந்தோடல்

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் எனநடுங்கியே - **செயங்கொண்டார்**

## ஒன்றே குலம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே - **திருமூலர்**

## திருக்குறள்

**படைச்செருக்கு**

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

**நட்பு**

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு

**பண்புடைமை**

பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

- **திருவள்ளுவர்**

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

மொழி

இயல் 1

தமிழ் இன்பம்

கவிதைப்பேழை

# தமிழ்மொழி வாழ்த்து

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பாடநூல் வினாக்கள்)

**1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________**

அ) வைப்பு அ) கடல் இ) பரவை ஈ) ஆழி

**விடை : அ) வைப்பு**

**2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும் இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும்

**விடை : இ) என்றும் + என்றும்**

**3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) வான + மளந்தது ஆ) வான்+ அளந்தது

இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது

**விடை : இ) வானம் + அளந்தது**

**4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) அறிந்தது அனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்

இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்

**விடை : இ) அறிந்ததனைத்தும்**

**5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த

**விடை : இ) வானமறிந்த**

### கூடுதல் வினாக்கள்

**6. பாரதியார் ________ அழைக்கப்பட்டார்**

அ) உவமைக் கவிஞர் ஆ) புரட்சிக் கவிஞர் இ) மக்கள் கவிஞர் ஈ) தேசியக் கவி

**விடை : ஈ) தேசியக் கவி**

**7. இசை என்பதன் பொருள் ________**

அ) புகழ் ஆ) வசை இ) மொழி ஈ) உலகம்

**விடை : அ) புகழ்**

**8. பாரதியார் பிறந்த ஆண்டு ________**

அ) 1910 ஆ) 1882 இ) 1890 ஈ) 1822

**விடை : ஆ) 1882**

## II. தமிழ்மொழி வாழ்த்து – இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

வாழ்க எங்கள் வாழ்க

வாழிய என்றென்றும் வாழ்க



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சொல்லும் பொருளும்

- நிரந்தரம் - காலம் முழுமையும்
- வைப்பு - நிலப்பகுதி
- சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
- வண்மொழி - வளமைமிக்க மொழி
- இசை - புகழ்
- தொல்லை - பழமை, துன்பம்

## IV. பிரித்து எழுதுக

- அளந்திடு - அளந்து + இடு
- வினைதரும் - வினை + தரும்
- வண்மொழி - வண்மை + மொழி

| V. கோடிட்ட இடங்களை நிரப்புக | | விடைகள் |
|---|---|---|
| 1. | பாரதியார் பிறந்த ஊர் ………… | **எட்டையபுரம்** |
| 2. | 'விடுதலைக் கவிஞர்' என அழைக்கப்பட்டவர் | **பாரதியார்** |
| 3. | பாரதியாரின் இயற்பெயர் ………… | **சுப்பிரமணியன்** |
| 4. | இந்தியா, விஜயா முதலான இதழ்களை நடத்தியவர் ………… | **பாரதியார்** |
| 5. | 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்பட்டவர் ….. | **பாரதியார்** |
| 6. | 'புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன்' எனப் பாரதியாரைப் புகழ்ந்தவர் …… ஆவார் | **பாரதிதாசன்** |
| 7. | 'தொல்லை' என்பதன் பொருள் ……… | **துன்பம்** |

## VI. இலக்கணக் குறிப்பு தருக

வாழ்க - வியங்கோள் வினைமுற்று
வளர்மொழி - வினைத்தொகை
வண்மொழி - பண்புத்தொகை
தருதொல்லை - வினைத்தொகை

## VII. குறுவினாக்கள் (பாடநூல் வினாக்கள்)

**1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?**

ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தமிழ் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்டு வாழ்கின்றது.

**2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**

வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து தமிழ்மொழி மேன்மேலும் வளர்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கூடுதல் வினாக்கள்**

**3. தமிழ்நாடு எவ்வாறு ஒளிர வேண்டும் எனப் பாரதியார் விரும்புகிறார்?**

பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிரவேண்டும் எனப் பாரதியார் விரும்புகிறார்.

**4. பாரதிதாசன் பாரதியாரை எவ்வாறு புகழ்ந்துரைத்தார்?**

சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த்தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் பாரதியாரைப் புகழ்ந்துரைத்தார்.

**5. பாரதியார் எழுதிய நூல்கள் யாவை?**

குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், தராசு, ஞானரதம், சந்திரிகையின் கதை, தனிப்பாடல்கள் (கவிதைகள்) போன்ற நூல்களைப் பாரதியார் எழுதியுள்ளார்.

**6. பாரதியாரின் பன்முக ஆற்றல் யாவை?**

கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதியார்.

## VIII. சிறுவினா (பாடநூல் வினாக்கள்)

**1. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

- தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்கிறது.
- ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான மொழி தமிழ்.
- ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ் கொண்டது தமிழ்மொழி.
- எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் பரந்து, எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்.
- அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைக.
- பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க.
- வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க எனப் பாரதியார் தமிழ்மொழியை வாழ்த்துகிறார்.

**கூடுதல் வினா**

**1. பாரதியார் – குறிப்பு வரைக.**

- பெயர் : பாரதியார்
- இயற்பெயர் : சுப்பிரமணியன்
- பெற்றோர் : சின்னசாமி - இலக்குமி அம்மையார்
- துணைவி : செல்லம்மாள்
- பிறப்பு : 11.12.1882
- பன்முக ஆற்றல் : கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர்.
- நூல்கள் : கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள்
- உரைநடை நூல்கள் : ஞானரதம், தராசு, சந்திரிகையின் கதை
- சிறப்பு : தேசியக்கவி, விடுதலைக்கவிஞர்
- நடத்திய இதழ்கள் : இந்தியா, விஜயா, சுதேசமித்திரன்
- இறப்பு : 11.09.1921



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IX. சிந்தனை வினா (பாடநூல் வினாக்கள்)

**1. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**

➢ பாரதியார் தமிழை வளமிக்க மொழி எனறு அழைப்பதற்குக் காரணம் அதில் இலக்கிய வளம், இலக்கண வளம், வேர்ச்சொற்களின் வளம், பொருள் வளம் ஆகியவை நிறைந்துள்ளது.

➢ மேலும் தமிழ் மொழி எக்காலத்திற்கும் நிலைபெற்றிருக்கும் நிலைத்த மொழியாகவும் உலகம் முழுவதிலும் பல மொழிகளுக்கு வேர்ச் சொற்களை வழங்கும் தாயாகவும் இன்றும் நிலைத்திருக்கின்றது.

➢ வானம் வரை உள்ள எல்லாவற்றையும் உலகிற்கு உணர்த்தும் மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

➢ அறிவியல் தமிழாய், அழகு தமிழாய், இயற்கைத் தமிழாய், இனிய தமிழாய், வளமிக்க மொழியாகத் தமிழ்மொழி விளங்குவதாகப் பாரதியார் பாடுகின்றார்.

## கற்பவை கற்றபின்

**1. 'தமிழ்மொழி வாழ்த்து' பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

**2. படித்துச் சுவைக்க.**

**செந்தமிழ் அந்தாதி**

செந்தமிழே செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே! - முந்தை
மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!
எழில்மகவே! எந்தம் உயிர்.
உயிரும்நீ; மெய்யும்நீ; ஓங்கும் அறமாம்
பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ;
வீரம்நீ; காதல்நீ; ஈசன் அடிக்குநல்
ஆரம்நீ; யாவும்நீ யே! - து. அரங்கன்

## கவிதைப்பேழை

# தமிழ்மொழி மரபு

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பாடநூல் வினாக்கள்)

**1. பறவைகள் ....... பறந்து செல்கின்றன**

அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்

**விடை : ஆ) விசும்பில்**

**2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ..........**

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

**விடை : அ) மரபு**

**3. 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை
இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை

**விடை : அ) இரண்டு + திணை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....**

அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால் இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால்

**விடை : ஆ) ஐந்து + பால்**

## II. சொல்லும் பொருளும்

1. விசும்பு - வானம்
2. மயக்கம் - கலவை
3. இருதிணை - உயர்திணை, அஃறிணை
4. வழாஅமை - தவறாமை
5. ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால் பலவின்பால்
6. மரபு - வழக்கம்
7. திரிதல் - மாறுபடுதல்
8. செய்யுள் - பாட்டு
9. தழா அல் - தழுவுதல் (பயன்படுத்துதல்)

## III. பிரித்து எழுதுக.

1. பிறிதாகும் - பிறிது + ஆகும்
2. ஐம்பால் - ஐந்து + பால்
3. திரிவில் - திரிவு + இல்

## IV. எதிர்ச்சொல் தருக

1. கலந்த × கலவாத
2. வழா அமை × வழுவுதல்
3. இல்லை × உண்டு

## V. இலக்கணக் குறிப்பு

1. தழா அல், வழா அமை } - உயிரளபெடை
2. ஐந்தும் - முற்றும்மை
3. கலந்த - பெயரெச்சம்
4. திரிதல் - தொழிற்பெயர்

| VI. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. தொல்காப்பியத்தின் ஆசிரியர் ......... | **தொல்காப்பியர்** |
| 2. வாழ்வுக்குரிய ஒழுங்கு முறைகள் ....... எனப்படும் | **ஒழுக்கம்** |
| 3. மொழிக்குரிய ஒழுங்கு முறைகள் ....... எனப்படும் | **மரபு** |
| 4. மிகப் பழமையான இலக்கண நூல் ....... | **தொல்காப்பியம்** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VII. குறுவினா (பாடநூல் வினாக்கள்)

**1. உலகம் எவற்றால் ஆனது?**

இவ்வுலகம் நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும்.

**2. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?**

செய்யுளில் மரபுகளை மாற்றக்கூடாது ஏனென்றால், மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

## VIII. சிறுவினா (கூடுதல் வினாக்கள்)

**1. தொல்காப்பியம் சிறு குறிப்பு வரைக.**

- தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர்.
- தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும்.
- இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது.
- பொருளதிகாரத்தின் மரபியலில் உள்ள மூன்று நூற்பாக்கள் (91, 92, 93) நம் பாடப்பகுதியில் தரப்பட்டுள்ளன.

**2. அளபெடை என்றால் என்ன? விளக்குக.**

அளபெடை என்பது புலவர்கள் சில எழுத்துகளை அவற்றுக்கு உரிய மாத்திரை அளவை விட நீண்டு ஒலிக்குமாறு பயன்படுத்துவது உண்டு. அவ்வாறு நீண்டு ஒலிப்பது அளபெடை ஆகும்.

எ.கா. தழாஅல்

**3. உயிரளபெடை விளக்குக?**

- உயிரெழுத்துகளில் நெடில் ஏழும் (ஆ, ஈ, ஊ, ஏ,ஐ, ஓ,ஔ தமக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து மிகுந்து ஒலிப்பதை உயிரளபெடை என்கிறோம். குறில் உயிரெழுத்து அளபெடுக்கும் போது நெடில் பக்கத்தில் இடப்படும்.
- பாடலில் இடம்பெற்றுள்ள "வழாஅமை, தழாஅல் ஆகிய சொற்களில் உள்ள "ழா" என்னும் எழுத்தை மூன்று மாத்திரை அளவு நீட்டி ஒலிக்க வேண்டும்.
- அதற்கு அடையாளமாகவே "ழா" வை அடுத்து 'அ' இடம் பெற்றுள்ளது. இவ்வாறு உயிர் எழுத்து நீண்டு ஒலிப்பதை 'உயிரளபெடை' என்பர்.

**4. விலங்குகளின் இளமைப் பெயர்களைக் கூறுக.**

| | | | |
|---|---|---|---|
| புலி | - | பறழ் | குதிரைக்குட்டி |
| சிங்கம் | - | குருளை | நாய்க்குட்டி |
| யானை | - | கன்று | மான் கன்று |
| மாடு | - | கன்று | ஆட்டுக்குட்டி |
| கரடி | - | குட்டி | பூனைக்குட்டி |

**5. விலங்குகளின் ஒலி மரபுகள் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புலி | - | உறுமும் | நரி | - | ஊளையிடும் |
| சிங்கம் | - | முழங்கும் | குதிரை | - | கனைக்கும் |
| யானை | - | பிளிறும் | நாய் | - | குரைக்கும் |
| மாடு | - | கதறும் | எருது | - | எக்காளமிடும் |
| கரடி | - | கத்தும் | ஆடு | - | கத்தும் |
| குரங்கு | - | அலப்பும் | பசு | - | கதறும் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IX. சிந்தனை வினா (பாடநூல் வினாக்கள்)

**1. நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

➢ மரபுகளை நம் முன்னோர் பின்பற்றியதன் காரணம் வாழ்விலும், மொழியிலும் சில ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்பது ஒரு காரணம்.

➢ மொழிக்குரிய ஒழுங்கு முறைகளாகிய மரபு சிதைக்கப்படலாகாது; பழங்காலம் முதலே பின்பற்றப்பட்டு வந்துள்ளன. அதனைக் கட்டிக் காத்து முன்னோர் கூறிய சொற்களால் தான் கூறுதல் வேண்டும்.

➢ கல்லைக் 'கல்' என்றும், மண்ணை 'மண்' என்றும் தான் கூற வேண்டும். மாற்றிக் கூறினால் பொருள் மாறுபடும்.

## கற்பவை கற்றபின்

**1. பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக.**

காகம் கரையும் ; கூகை குழறும் ; குருவி கீச்சிடும் ;
சேவல் கூவும் ; கோழி கொக்கரிக்கும் ; ஆந்தை அலறும் ;
கிளி பேசும் (கொஞ்சும்) மயில் அகவும் ; குயில் கூவும் ; வண்டு முரலும்

**2. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.**

1. **நிலம் :** புவி, பூலோகம், புவனம், பூமாதேவி, நிலமகள், நிலமடந்தை, மண்.
2. **நீர் :** புனல், தண்ணீர், ஆறு, குதலை, நீரம், கடல்
3. **தீ :** நெருப்பு, அனல், கனல், அழல், தழல், எரி
4. **காற்று :** வளி, வாயு, கொண்டல், தென்றல்
5. **ஆகாயம் :** விசும்பு, வான், வானம், வான்வெளி, மேலோகம், வளிமண்டலம், விண்

**உரைநடை உலகம்**

# தமிழ் வரிவடிவ வளர்ச்சி

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பாடநூல் வினாக்கள்)

**1. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ...... காரணமாக அமைந்தது.**

அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

**விடை : இ) அச்சுக்கலை**

**2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ..... என அழைக்கப்படுகிறது.**

அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து
இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

**விடை : ஆ) வட்டெழுத்து**

**3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ......**

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

**விடை : ஆ) தந்தை பெரியார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கூடுதல் வினாக்கள்**

**4. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை ......... பிரிக்கலாம்**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

**விடை : அ) இரண்டு**

**5. ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ........ எழுத்து நிலை என்பர்.**

அ) ஒலி ஆ) வரி இ) ஓவிய ஈ) ஒளி

**விடை : அ) ஒலி**

| II. கோடிட்ட இடத்தை நிரப்புக (பாடநூல் வினாக்கள்) | விடைகள் |
|---|---|
| 1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் .......... என அழைக்கப்பட்டன. | **கண்ணெழுத்துகள்** |
| 2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ...... | **வீரமாமுனிவர்** |

**கூடுதல் வினாக்கள்**

| | |
|---|---|
| 3. எகர ஒகர முதல் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் ..... காலம் முதல் இருந்து வந்தது | **தொல்காப்பியர்** |
| 4. அரச்சலூர் கல்வெட்டில் தமிழ் எழுத்தும் ......... கலந்து எழுதப்பட்டுள்ளன. | **வட்டெழுத்தும்** |
| 5. கண்ணெழுத்துகளை ....... என்ற இலக்கியத்தில் காண்கிறோம் | **சிலப்பதிகாரம்** |
| 6. தமிழெழுத்து என்பது இக்காலத்தில்எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் ........ வடிவம் ஆகும் | **வரி** |

## III. பிரித்து எழுதுக

1. தொடக்கக் காலம் - தொடக்கம் + காலம்
2. காலந்தோறும் - காலம் + தோறும்
3. பதினொன்றாம் - பதின் + ஒன்றாம்
4. காலத்திற்கேற்ப - காலத்திற்கு + ஏற்ப
5. குறிலெழுத்துகள் - குறில் + எழுத்துகள்

## IV. சேர்த்து எழுதுக

1. நூறு + ஆண்டு - நூற்றாண்டு
2. தமிழ் + எழுத்து - தமிழெழுத்து
3. பண்டை + காலம் - பண்டைக்காலம்
4. அடைந்து + இருக்கின்றன - அடைந்திருக்கின்றன
5. இ + காலம் - இக்காலம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. குறுவினாக்கள் (பாடநூல் வினாக்கள்)

**1. ஓவிய எழுத்து என்றால் என்ன?**

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**

ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர்எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்

**3. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**

- பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர்.
- அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன.
- ஓலைகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர்.

**4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக.**

- தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர் (எ.கா) ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தார்.
- 'எ' என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு 'ஏ' என்னும் எழுத்தை நெடிலாகவும் 'ஒ' என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு 'ஓ' என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.
- அதேபோல், ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக் கொம்பு (ே), இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ே ா) புதிய வரி வடிவத்தை அறிமுகப்படுத்தினார்.

### கூடுதல் வினாக்கள்

**5. கண்ணெழுத்துகள் பற்றிக் கூறுக.**

கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் "கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி" (சிலம்பு 5 : 12) என்னும் தொடரால் அறியலாம்.

**6. தமிழ் எழுத்துகள் வரிவடிவ வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தவை யாவை?**

தமிழ் எழுத்துகள் காலத்திற்கேற்பப் பல உருவ மாற்றங்களைப் பெற்றுள்ளன. இவ்வாறு எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன.

## VI. சிறுவினாக்கள் (பாடநூல் வினாக்கள்)

**1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

- ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
- ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.
- புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா, உயிர்மெய்யா, குறிலா, நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.
- இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர்.
- எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

- நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.
- ஐகார உயர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுகின்றது.
- ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகிறது.
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

**கூடுதல் வினாக்கள்**

**3. பெரியார் செய்த எழுத்துச் சீர்திருத்தம் யாது?**

- இருபதாம் நூற்றாண்டு வரை ணா, றா, னா ஆகிய எழுத்துகளை ண, ற, ன என எழுதினர்.
- அதே போல் ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை ணை, லை, ளை, னை என எழுதினர்.
- இவற்றை அச்சுக் கோப்பதற்காக இவ்வெழுத்துக்களுக்குத் தனி அச்சுக்கள் உருவாக்கப்பட்ட வேண்டியிருந்தது.
- இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார்
- அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

## VII. நெடுவினா (பாடநூல் வினா)

**1. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

**முன்னுரை :**

- மனிதனின் அறிவு வளர்ச்சியின் பரிணாமமாக இருப்பது மொழி எனலாம். அவன் ஒலிக்குறிப்புகளைக் கொண்டு சொற்களாக்கிப் பின்பு அவற்றைச் செம்மைப்பட்ட பேச்சு மொழியாக உருவாக்கிப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தான்.

**எழுத்துகளின் தோற்றம் :**

- மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாக் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

**ஓவிய எழுத்து :**

- தொடக்கக் காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**ஒலி எழுத்து நிலை :**

- ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

**முடிவுரை :**

- இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

**கூடுதல் வினா**

**2. தமிழ் எழுத்துகளின் வகைகளையும் அவற்றின் வளர்ச்சியும் குறித்து எழுதுக.**

**முன்னுரை :**

- காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இருபிரிவுகள் :**

- தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காண முடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரி வடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**வட்டெழுத்து :**

- வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும். சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகள் இடம் பெற்றுள்ளன.

**தமிழெழுத்து :**

- தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும். முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

**கண்ணெழுத்துகள் :**

- கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் “கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி” (சிலம்பு 5 : 12) என்னும் தொடரால் அறியலாம்.

## VIII. சிந்தனை வினா (பாடநூல் வினா)

**1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

- தமிழில் புதிய கலைச் சொற்களை உருவாக்க வேண்டும்.
- வேர்ச்சொற்களைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்க வேண்டும்.
- இன்னும் அதிகமாகக் கணினிப் பயன்பாட்டில் தமிழ்மொழி பயன்படுத்தப்பட வேண்டும்.
- ஆட்சி மொழியாக, நீதிமன்றங்களில் வழக்காடும் மொழியாகத் தமிழ்மொழி உருவாக வேண்டும்.
- தனித்தமிழ் (வார்த்தைகள்) சொற்களைப் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும்.
- புதிய நூல்கள் அதிகம் எழுதப்பட வேண்டும்.
- தமிழில் புதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும்.
- தமிழ் மொழியில் உள்ள நூல்களை வாசிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

**2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து கலந்துரையாடவும்.**

- தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் நாம் தமிழ் எழுத்துகளை மறக்கத் தலைப்படுகிறோம்.
- நமக்குரிய தனித்தன்மைகளை இழந்து மற்றொரு மொழியினைச் சார்ந்து இருக்கும் நிலை உருவாகிறது.
- இது தமிழுக்கு வளர்ச்சியைத் தராது.
- எனவே, நாம் தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதாமல் தமிழிலேயே எழுதப் பழக வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**1. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்ஜனைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

‘மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினலும், நோயினலும் அச்சுறுத்தப்படுகிருன் பலவீனனக இருப்பவன் போருக்கு அஞ்சுகிருன்; செல்வந்தனக இருப்பவனே தன் கொழுத்த



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிருன்' என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நிஜனவு கூரத் தக்கது.

**இன்றைய வரி வடிவம் :**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சனைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினாலும், நோயினாலும் அச்சுறுத்தப்படுகிறான் பலவீனனாக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறான். செல்வந்தனாக இருப்பவனோ தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிறான், என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூரத் தக்கது.

## விரிவானம் சொற்பூங்கா

### I. மதிப்பீடு. (பாடநூல் வினா)

**1. தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

மொழி என்பதற்குச் சொல் என்பது பொருள். ஓர் எழுத்து, ஈரெழுத்து, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர். ஓர் எழுத்து மொழி எவை எனின் நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒரு மொழி என்பார் தொல்காப்பியர்.

**நெட்டெழுத்துகள் :**

நெட்டெழுத்து எவை என்ற ஐயம் தோன்றாமல் இருக்கவே உயிர் நெடில் எழுத்து என்றோ உயிர்மெய் நெட்டெழுத்து என்றோ கூறாமல் நெட்டெழுத்து என்று மட்டும் கூறினார்.

**நன்னூலார் கூற்று :**

உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த,ப,ந என்னும் ஐந்து ஐந்து எழுத்துகளும் க,ச,வ என்னும் வரிசைகளில் நான்கு நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் தொல்காப்பியர். நன்னூலார். நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்பார்.

**கலைச்சொற்கள் :**

பூ, கா, ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே இன்னவாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும் உள்ளன. பூ, கா இணைந்து 'பூங்கா' அதைப்போல் ஆ, மா என்பவை இணைந்து 'ஆமா' என்னும் கலைச்சொற்கள் வடிவம் கொண்டமை பண்டைக்காலத்திலேயே உண்டு காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்.

யா, மா, ஈ, போ, வா, டு, சூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களே.

**மாற்றங்கள் :**

இன்று ஆண் என்பது ஆ ஆகிறது ; மான் என்பது மா ; கோன் என்பது கோ ; தேன் என்பது தே ; பேய் என்பது பே. இவையெல்லாம் கால வெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை. ஏவு என்னும் சொல் 'ஏ' என்று ஆனது மட்டுமின்றி 'எய்' எனவும் ஆயிற்று.

**முடிவுரை :**

தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். இத்தகைய தமிழ்மொழியின் சொற்களை மொழிப்பற்றை மீட்டெடுத்தலே நம் கடமை என இரா. இளங்குமரனார் நம்மை அழைக்கிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

- அவன் வா என்றதும் நீ போ, பை தருவான், வாங்கி வா.
- 'தா' என்றதும் தந்தாய் 'தை' மாதம் வா என்றதும் வந்தாய்,
- கோ என்றால் அரசன் 'பூ' மணம் வீசும்.
- 'ஆ' என்றால் பசு. 'நா' என்றால் நாக்கு
- 'தீ' என்று பதறினாய், 'கா' வில் இருப்பது குளிர்ச்சி எனச் சோலைக்குள் புகுந்தாய்.

## தெரிந்து கொள்வோம்

**42 – ஓரெழுத்து ஒரு மொழிகள்**

- உயிர் எழுத்து - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ
- மகர வரிசை - மா, மீ, மு, மே, மை, மோ
- தகர வரிசை - தா, தீ, தூ, தே, தை
- பகர வரிசை - பா, பூ, பே, பை, போ
- நகர வரிசை - நா, நீ, நே, நை, நோ
- ககர வரிசை - கா, கூ, கை, கோ
- சகர வரிசை - சா, சீ, சே, சோ
- வகர வரிசை - வா, வீ, வை, வௌ
- யகர வரிசை - யா
- குறில் எழுத்து - நொ, து

# கற்கண்டு — எழுத்துகளின் பிறப்பு

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பாடநூல் வினாக்கள்)

**1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் .......**

அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ

**விடை : ஆ) உ, ஊ**

**2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ..............**

அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு

**விடை : இ) தலை**

**3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ......**

அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

**விடை : ஆ) மார்பு**

**4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் .........**

அ) க்,ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம்

**விடை : இ) ட்,ண்**

**5. கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ......**

அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ்

**விடை : ஈ) வ்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

**6. உயிர் எழுத்துகள் பிறக்கும் இடம் .......**

அ) தலை ஆ) கழுத்து இ) மூக்கு ஈ) மார்பு

**விடை : ஆ) கழுத்து**

**7. இடையின மெய் எழுத்துகள் ....... இடமாகக் கொண்டு பிறக்கின்றன.**

அ) கழுத்து ஆ) மார்பு இ) மூக்கு ஈ) தலை

**விடை : அ) கழுத்து**

## II. பொருத்துக. (பாடநூல் வினா)

1. க், ங் - நாவின் இடை, அண்ணத்தின் இடை
2. ச்,ஞ் - நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி
3. ட், ண் - நாவின் முதல், அண்ணத்தின் அடி
4. த்,ந் - நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

**விடை :**

**1. நாவின் முதல், அண்ணத்தின் அடி**
**2. நாவின் இடை, அண்ணத்தின் இடை**
**3. நாவின் நுனி, அண்ணத்தின் நுனி**
**4. நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி**

| III. கோடிட்ட இடங்களை நிரப்புக (கூடுதல் வினாக்கள்) | விடைகள் |
|---|---|
| 1. ஒவ்வொரு எழுத்துக்கும் பிறக்கும் இடமும் பிறக்கும் ..... வெவ்வேறாக உள்ளன. | **முயற்சியும்** |
| 2. எழுத்துகளின் பிறப்பினை .... முயற்சிப் பிறப்பு என இரண்டு வகைகளாகப் பிரிப்பர். | **இடப்பிறப்பு** |
| 3. மெல்லின மெய்யெழுத்துகள் ஆறும் ....... இடமாகக் கொண்டு பிறக்கின்றன | **மூக்கை** |
| 4. அ,ஆ ஆகிய இரண்டும் .... திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன. | **வாய்** |
| 5. ய் என்ற எழுத்து ..... அடிப்பகுதி, மேல் வாய் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது | **நாக்கின்** |
| 6. மேல் வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுவதால் பிறக்கும் எழுத்து .... | **ள்** |
| 7. மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் .... என்ற எழுத்துகள் பிறக்கின்றன | **ப், ம்** |
| 8. ஒ, ஓ ஆகிய எழுத்துகள் வாய்திறக்கும் முயற்சியுடன் ...... களைக் குவிப்பதால் பிறக்கின்றன | **இதழ்** |

## IV. குறுவினாக்கள் (கூடுதல் வினாக்கள்)

**1. எழுத்துகள் பிறக்கும் இடங்கள் யாவை?**

மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்கள் எழுத்துகள் பிறக்கும் இடங்கள் ஆகும்.

**2. எழுத்துகள் எவ்வெவற்றின் முயற்சியால் பிறக்கின்றன?**

எழுத்துகள் இதழ், நாக்கு, மேல்வாய், பல் ஆகிய உறுப்புகளின் முயற்சிகளால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**3. உயிரெழுத்துகள் எம்முயற்சிகளால் பிறக்கின்றன?**

➢ அ, ஆ ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.

➢ இ,ஈ,எ,ஏ,ஐ ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

➢ உ,ஊ,ஒ,ஓ,ஔ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.

## V. சிறுவினா (பாடநூல் வினாக்கள்)

**1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**

➢ உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றினைப் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

➢ எழுத்துகளின் பிறப்பினை இடப்பிறப்பு, முயற்சிப்பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

**2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

➢ வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

➢ மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

➢ இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**3. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.**

➢ ழகர (ழ்) - மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றது.

➢ லகர (ல்) - மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கின்றது.

➢ ளகர (ள்) - மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுவதால் பிறக்கின்றது.

### கூடுதல் வினா

**4. சார்பெழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன?**

➢ ஆய்த எழுத்து வாயைத் திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது.

➢ பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

## கற்பவை கற்றபின்

**1. 'ஆய்தம்' – இச்சொல் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.**

| எழுத்துகள் வகை | ஆ உயிர் எழுத்து | ய் மெய் எழுத்து | த உயிர் மெய் எழுத்து | ம் மெய் எழுத்து (மெல்லினம்) |
|---|---|---|---|---|
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு | மூக்கு |

## மொழியை ஆள்வோம்

**I. கேட்க.**

**1. தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

அ) செந்தமிழ்த் தாயே உன் சிந்தை குளிர எங்கள்
வந்தனை கொள்வாயம்மா தேவி (செந்)
நற்புலவர் கூடிச் சங்கம் வளர்த்த நாட்டில்
பற்பலரும் போற்றப் பாங்காய் கொலுவிருக்கும் (செந்)

www.Padasalai.Net www.CBSEtips.in



- இயல் இசை நாடகமே நீயாகி நின்றாயே
  இனிய நற் கவியாகி இன்புற வைத்தாயே
  நீ இந்த வையத்தில் நின்று நிலைத்திடுவாய்
  தாயும்மை பதம் பாடும் சேயெம்மைக் காப்பாயே (செந்)
- பாண்டியன் பைங்கிளியால் பவனி வந்தாண்டிடச்
  சேரனும் சோழனும் சேர்ந்துனைப் போற்றிடச்
  சுந்தரியே செல்வி சங்கத்தமிழ் பாடும்
  செந்தமிழே, உன்னை உயிரெனப் போற்றுவோம் (செந்)

ஆ). பூக்கள் பேசும் புன்னகை வீசும் தமிழ்மொழி
ஈக்கள் மொய்யும் தேனீக்கள் மொய்யும் தேனிந்த மொழி
உருப்பெறுமுன், நீ உருப்பெறுமுன், உருப்பெற்ற மொழி
கருப்பெறுமுன், தாய் கருப்பெறுமுன், கருப்பெற்ற மொழி
விடை, வாழ்வின்விடை, கேள்வித் தமிழில்
உடை, மானமாகும் உடை, மானம் தமிழில்
வானம், கைத்தொடவானம், தமிழ் வானம்
தானம், மற்ற மொழிகட்குத் தமிழ் உயிர்த்தானம்
எல்லாம் உலகெல்லாம் முதற்படி
சொல்லால் தமிழ்ச்சொல்லால் முதலடி ........

**II. கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

**முன்னுரை :**

எழுத்து என்பது ஒரு மொழியின் அடிப்படை கூறு ஆகும். மொழிக்கு நிலைபேறு அளிப்பது எழுத்தாகும். ஒலி வடிவத்திற்கு வரி வடிவம் கொடுப்பது எழுத்து. தமிழ் மொழி என்பது செம்மொழியாகவும் பண்டைக்காலம் தொட்டே சிறந்த இலக்கண, இலக்கியங்கள் பெற்ற மொழியாகவும் உள்ளது. அவ்வாறான தமிழ் எழுத்துகள் படிப்படியாகச் சில மாறுதல்களைப் பெற்றே இன்றைய எழுத்து மொழியாக உருவம் பெற்றிருக்கின்றன.

**தோற்றம் :**

மனிதன் முதலில் தான் கண்ட பொருளின் பெயரைக் கூற முடியாத நிலையில் இருந்தான். பின்பு அவற்றைச் சித்தரித்துக் காட்டினான். பொருள்களின் பண்புகளைத் தன் செய்கையால் அறிவித்து அதனைப் பெற்று வந்தான். மூன்றாவதாகக் குறுக்கெழுத்துப் போல ஒரு பொருளுக்கு ஒரு எழுத்து இட்டு வழங்கினான். இங்ஙனம் மொழியானது உருவானது.

**வளர்ச்சி நிலை :**

எழுத்துகளின் வளர்ச்சியைச் சித்திரவெழுத்து, தன்மையெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து என நான்காகக் கொள்ளலாம். இவற்றை நன்னூலார் எழுத்தியல் ஈற்றுச் சூத்திர உரையில் மயிலைநாதன் என்னும் உரையாசிரியர் விளக்கமாகக் கூறியுள்ளார்.

**தமிழின் தனிச்சிறப்பு :**

எழுத்துகள் நெடுங்கணக்கின் நிலையை அடைவதற்கு முந்திய காலங்களில் பெற்றிருந்த உருவங்களைப் பற்றிய குறிப்புகள் தமிழைத் தவிர வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களில் காணப்படவில்லை என்பர். பி.என். சுப்பிரமணியன் அவர்கள் கூறுகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**இன்றைய நிலை :**

தமிழ் எழுத்து ஏனைய பிராமிய குடும்ப எழுத்துகள் போன்று பிராமி எழுத்து முறையில் இருந்து உருவாகியது எனக் கருதப்படுகிறது. 2 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்திய கல்வெட்டுகளில் சற்று மாறுபட்ட தமிழ்ப் பிராமிவடிவம் காணப்படுகிறது. கி.பி. 56 ஆம் நூற்றாண்டுகளில் இவை தொடக்க வட்டெழுத்து என அழைக்கப்படும் வடிவத்தை அடைந்தன. கி.பி 11 ஆம் நூற்றாண்டிற்குப் பின் வந்த சோழ - பல்லவ தமிழ் எழுத்து முறை நவீன தமிழ் எழுத்து முறையாக வளர்ச்சி பெற்றது.

**முடிவுரை :**

இவ்வாறு தமிழ் எழுத்துகளின் வளர்ச்சியானது பல பரிணாம நிலையை அடைந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. இன்னும் அது கணினி மொழியில் உலகம் முழுவதும் பரவப்பட வேண்டும். அப்பொழுதுதான் உலகமொழியாகத் தமிழ் மொழி உயரும்.

## III. சொல்லக்கேட்டு எழுதுக.

உலக மொழிகளின் எழுத்து வரலாற்றை உற்று நோக்கினால் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறியலாம். அவை ஒரு வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக் கொள்ளுதல்; இருக்கின்ற வரிவடிவத்தில் திருத்தம் செய்து கொள்ளுதல்; எழுத்து எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியனவாகும். வரிவடிவ மாற்றம், வரிவடிவத் திருத்தம், எழுத்துகளின் எண்ணிக்கை மாற்றம் ஆகியவற்றை எழுத்துச் சீர்திருத்தம் என்று குறிப்பிடுகிறோம்.

## IV. அகரவரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

**அழகுணர்ச்சி, ஆரம்நீ, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடி, ஔகாரம்.**

## V. அறிந்து பயன்படுத்துவோம்.

**மரபுத் தொடர்கள்**

தமிழ் மொழிக்கெனச் சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப் படுகின்றன.

**பறவைகளின் ஒலி மரபு**

- ஆந்தை அலறும்
- குயில் கூவும்
- மயில் அகவும்
- காகம் கரையும்
- கோழி கொக்கரிக்கும்
- கிளி பேசும்
- சேவல் கூவும்
- புறா குனுகும்
- கூகை குழறும்

**தொகை மரபு**

- மக்கள் கூட்டம்
- ஆநிரை
- ஆட்டு மந்தை
- கோழிப்பண்ணை
- யானைக்கூட்டம்
- எறும்புச்சாரை
- திராட்சைக்குலை
- வீரர்படை
- பசுதிரை
- சாவிக்கொத்து
- சுள்ளிக்கற்றை
- வைக்கோல் போர்

**வினை மரபு**

- சோறு உண்
- தண்ணீர் குடி
- பூக் கொய்
- முறுக்குத் தின்
- பால் பருகு
- இலை பறி
- சுவர் எழுப்பு
- கூடை முடை
- பானை வனை
- அம்பு எய்
- ஆடை நெய்
- உமி கருக்கு
- மரம் வெட்டு
- மாத்திரை விழுங்கு
- செய்யுள் இயற்று
- ஓவியம் புனை
- சிற்பம் செதுக்கு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**தாவரங்களின் உறுப்பு பெயர்கள்**

- ஈச்சவோலை
- தாழை மடல்
- பனையோலை
- கமுகங் கூந்தல்
- தென்னங்கீற்று
- மாவிலை
- சோளத்தட்டு
- நெல் தாள்
- முருங்கைக்கீரை
- வேப்பந்தழை
- வாழையிலை
- மூங்கில் இலை

**விலங்குகளின் ஒலி மரபு**

- ஆடு கத்தும்
- எருது எக்காளமிடும்
- குதிரை கனைக்கும்
- குரங்கு அலப்பும்
- சிங்கம் முழங்கும்
- நரி ஊளையிடும்
- புலி உறுமும்
- பூனை சீறும்
- யானை பிளிறும்
- எலி கீச்சிடும்
- நாய் குரைக்கும்

**VI. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கோழி ....... (கூவும்/கொக்கரிக்கும்) **விடை : கொக்கரிக்கும்**
2. பால் ....... (குடி/பருகு) **விடை : பருகு**
3. சோறு ...... (தின்/உண்) **விடை : உண்**
4. பூ ......... (கொய்/பறி) **விடை : கொய்**
5. ஆ ........... (நிரை/மந்தை) **விடை : நிரை**

**VII. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.**

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்கு புறப்பட்டாள்.

**விடை :**

**சேவல் கூவும் சத்தம் கேட்டுக் கயல் கண்விழித்தாள். பூக்கொய்ய நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கூவிக் கொண்டிருந்தது. பூவைக் கொய்ததுடன், தோரணம் கட்ட மாந்தளிரையும் பறித்துக் கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைப் பருகிவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.**

## VIII. கட்டுரை எழுதுக.

**நான் விரும்பும் கவிஞர் (பாரதிதாசன்)**

**முன்னுரை :**

தமிழ்மொழியையும், தமிழ்நாட்டையும் தம் இருகண்களாகக் கருதி உழைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே நான் விரும்பும் கவிஞர் ஆவார். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டு செய்வதே தனது தொண்டாகக் கொண்ட புரட்சிக் கவிஞரானார்.

**பிறப்பும் இளமையும் :**

பாரதிதாசன் புதுச்சேரியில் கனகசபை - இலக்குமி இணையருக்கு 29.4.1891 அன்று பிறந்தார். பாரதியின்மேல் கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் (சுப்புரத்தினம்) என மாற்றிக்கொண்டார். குடும்பவிளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு போன்ற நூல்களைப் படைத்துள்ளார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**மொழிப்பற்று :**

"தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத்

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனத் தமிழைத் தம் உயிராகக் கருதி ஆழ்ந்த பற்றும் புலமையும் கொண்டார். தமிழ் மொழியின் இனிமையைச் சுவைத்த அவர் தமிழை அமுது எனக் கூறுகிறார். மண்ணும் விண்ணும் தோன்றிய மூத்த மொழி எனத் தமிழ்மொழியின் தொன்மையை உலகறியப் பேசுகிறார்.

**நாட்டுப்பற்று :**

மொழிப்பற்றோடு நாட்டுப் பற்றும் மிக்க அவர். தமிழகத்தில் நிலவிய சாதி, மூடநம்பிக்கை, பெண்ணடிமை, உழைப்பவர்களின் துயரம் ஆகியவற்றைத் தம் கவிதைகளால் சாடியதோடு மட்டுமன்று அவற்றை நீக்கவும் அரும்பாடுபட்டார்.

**தொழில் வளம் :**

நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும். தொழிலாளர் நிலை உயரவேண்டும். எனவே "புதியதோர் உலகம் செய்வோம். கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்று தம் கவிதையால் புது உலகைப் படைக்க விரும்பினார்.

**முடிவுரை :**

தம் கவிதைத் திறத்தால் நாட்டு மக்களின் இதயத்தே நல்லறிவு மூட்டி மானமுள்ள தமிழர்களாக மக்கள் வாழ்ந்திடச் செய்தவர். சாதியாலும் மதத்தாலும் பிரிந்த மக்களை ஒன்றுபடுத்தி ஓரினமாக வாழவைத்த கவிஞரே நான் விரும்பும் பாரதிதாசன் ஆவார்.

## மொழியோடு விளையாடு

**I. பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.**

**கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா**

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| கிழமை (கிழமைகள்) | பூ (பூக்கள்) | மரம் (மரங்கள்) | கல் (கற்கள்) |
| கடல் (கடல்கள்) | ஈ (ஈக்கள்) | மாதம் (மாதங்கள்) | புல் (புற்கள்) |
| கை (கைகள்) | பசு (பசுக்கள்) | படம் (படங்கள்) | சொல் (சொற்கள்) |
| வாழ்த்து (வாழ்த்துகள்) | பா (பாக்கள்) | பக்கம் (பக்கங்கள்) | பல் (பற்கள்) |

**II. ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.**

(எ.கா) அணி - பல அணிகளை அணிந்த வீரர்கள், அணிஅணியாய்ச் சென்றனர்.

படி - படிக்கட்டுகளில் அகில் படிப்படியாக ஏறி மேற்படியை அடைந்தான்.

திங்கள் - திங்கள் அன்று மாலைத் திங்களைப் பார்த்துப் பரவசமடைந்தான்.

ஆறு - சோலை ஆறு பாதையில் ஆற்றைக் கடந்து ஆறு இளநீர்க் காய்களை வாங்கினான்.

**III. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.**

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து

**விடை : வட்டெழுத்து வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து எனப்படும்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.

**விடை : உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.**

3. வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.

**விடை : பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்.**

4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

**விடை : உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.**

5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

**விடை : அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்.**

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் :**

1. எழுத்துகளைச் சரியான வரிவடிவத்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்துவேன்.
3. ஒற்றுப் பிழைகள் இல்லாமல் எழுதப் பழகிக் கொள்வேன்.
4. பிறமொழிக் கலப்பின்றித் தூய தமிழில் எழுதுவேன்.
5. புதிய புதிய கலைச்சொற்களையும் வேர்ச்சொற்களையும் உருவாக்க முயல்வேன்.
6. தமிழ் மொழியில் உள்ள எழுத்துகளின் பிறப்பு, கால அளவு, வைப்பு முறைகளைச் சரியாக அறிந்து கொள்வேன்.

## கலைச்சொல் அறிவோம்

1. ஒலிபிறப்பியல் - Articulatory phonetics
2. மெய்யொலி - Consonant
3. மூக்கொலி - Nasal consonant sound
4. கல்வெட்டு - Epigraph
5. உயிரொலி - Vowel
6. அகராதியியல் - Lexicography
7. ஒலியன் - Phoneme
8. சித்திர எழுத்து - Pictograph

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



உணவில் காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றை அதிக அளவு சேர்த்து கொள்ள வேண்டும். அரிசி உணவை அளவாக உண்ண வேண்டும். மிகுதியான காரத்தையும் உப்பையும் தவிர்க்க வேண்டும். இரவு எளிமையான உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். இவையே உடல்நலம் பேணும் வழிமுறையாகும்.

**உடற்பயிற்சியின் தேவை :**

"ஓடி விளையாடு பாப்பா" என்றார் பாரதியார். உடல் வலுப்பெற உடற்பயிற்சி உறுதுணையாகும். விளையாட்டு, யோகா, மூச்சுப் பயிற்சி போன்றவை நோயின் தாக்கத்திலிருந்து நம்மைக் காக்கும். நாள்தோறும் நடந்தால் நோய் நம்மை விட்டு நடக்கும் ; ஓடினால் நோய் நம்மை விட்டு ஓடும் ; சோம்பேறியாக இருந்தால் நோய் நம்மோடு குடிகொள்ளும் என்பார்கள். எனவே உடற்பயிற்சியும் நடைப்பயிற்சியும் நோயின் பிடியிலிருந்து நம்மைக் காக்கும்.

**முடிவுரை :**

உடல் நலனை விரும்புவோர் முறையான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி, சுற்றுச்சூழலைப் பேணுதல், வருமுன் காத்தல் போன்ற அன்றாட நிகழ்வுகள் மூலம் நோயற்ற வாழ்வு வாழலாம்.


## மொழியோடு விளையாடு

**I. கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்களை எழுதுக.**



இயற்கை மருத்துவமே இன்ப வாழ்வு
இயற்கை உணவே நோயில்லா வாழ்வு
இடித்து உண்ட மருந்தே என்றும் இன்ப வாழ்வைத் தரும்
என்றென்றும் இணையில்லாதஇன்பவாழ்வு வாழ
இயற்கையோடு இயைந்து வாழ்வோம்

**II. வட்டத்திலுள்ள பழமொழிகளைக் கண்டுபிடித்து எழுதுக.**




1. முயற்சி திருவினையாக்கும்
2. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
3. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
4. பருவத்தே பயிர் செய்
5. அறிவே ஆற்றல்
6. அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு
7. சுத்தம் சோறு போடும்
8. வருமுன் காப்போம்
9. சுவர்இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்.
10. பசித்துப்புசி.

## நிற்க அதற்குத் தக

என் பொறுப்புகள் :

1. காலை மாலை உடற்பயிற்சி செய்வேன்
2. உரிய நேரத்தில் உறங்கச் செல்வேன்; உரிய நேரத்தில் விழித்தெழுவேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| நோய் | - Disease | பக்கவிளைவு | - Side Effect |
| மூலிகை | - Herbs | நுண்ணுயிர் முறி | - Antibiotic |
| சிறுதானியங்கள் | - Millets | மரபணு | - Gene |
| பட்டயக் கணக்கர் | - Auditor | ஒவ்வாமை | - Allergy |

▸▸☺ ☻ ☺◂◂



Kindly send me your study materials to padasalai.net@gmail.com